# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சூழல் பேணல் அறவீட்டுச் சட்டம்*

---

*(2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008, யூன் மாதம் 6 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சூழல் பேணல் அறவீட்டுச் சட்டம்*

*[2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 06/2008*

**சூழல்மீது தீங்குமிக்க தாக்கமொன்றை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள, பாவனையாளர்களுக்குச் சொந்தமான குறித்துரைக்கப்பட்ட பொருட்கள்மீது, இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொருட்கள்மீது அல்லது இலங்கையில் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட சேவைகள்மீது சூழல் பேணல் அறவீடொன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்தகைய அறவீட்டைச் சேகரிப்பதற்கும் மற்றும் அறவிடுவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சூழல் பேணல் அறவீடு சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

சூழல் பேணல் அறவீட்டை விதித்தல்.

**2.** (1) இச்சட்டம் செயற்பாட்டிற்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் "சூழல் பேணல் அறவீடு" என அழைக்கப்படும் அறவீடொன்றை விதித்தல் வேண்டும். சூழல் பேணல் அறவீடானது, சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கப்பட்டவாறாக பெறுமதிப்படி அல்லது குறித்த அடிப்படைமீது கணிக்கப்படவேண்டியவாறான அத்தகைய வீதத்தில் -

(அ) பாவனையாளர் ஒருவருக்குச் சொந்தமான குறித்துரைக்கப்பட்ட பொருளொன்று ;

(ஆ) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் ; அல்லது

(இ) இலங்கையினுள் வழங்கப்படும் குறித்துரைக்கப்பட்ட சேவைகள்,

மீது விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, எத்தகைய குறித்துரைக்கப்படும் பொருட்கள்மீது அல்லது குறித்துரைக்கப்படும் சேவைகள்மீது அத்தகைய அறவீடு விதிக்கப்படக்கூடியதோ அத்தகைய பொருட்களையும் சேவைகளையும் எத்தகைய வகுதி சம்பந்தமாக விதிக்கப்படக்கூடியதோ அத்தகைய வகுதிகளையும் அடையாளங் காணலாம்.

சூழல் பேணல் அறவீட்டை சேகரித்தல் நிருவகித்தல் மற்றும் அறவிடுதல் முறை.

**3.** (1) இரண்டாம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட சூழல் பேணல் அறவீடானது, இச்சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும்-

(அ) பாவனையாளர் ஒருவருக்குச் சொந்தமான பொருளொன்றின் விடயத்தில், சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் குறித்துரைக்கப் பட்ட நிறுவனத்தின் ஊடாகச் சேகரிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) இறக்குமதியாளரொருவர் விடயத்தில், அறவீடானது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, சுங்கப் பணிப் பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொருள் ஒவ்வொன்றின்மீதும் சேகரிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) உள்நாட்டு உற்பத்தியாளர் விடயத்தில், அறவீடானது, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) பணிப்பாளர் தலைமையதிபதியினால், அச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கிணங்க சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய உற்பத்தியாள ரால் உற்பத்திசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொருள் ஒவ்வொன்றின்மீதும் சேகரிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்படும் சேவை விடயத்தில், அறவீடானது, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) பணிப்பாளர் தலைமையதிபதியினால், அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சேவை வழங்குநரொருவரினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட சேவை ஒவ்வொன்றின் மீதும் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) இன் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட சூழல் பேணல் அறவீடானது, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட விடயத்திற்கேற்ப (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அல்லது 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது உற்பத்தித்தீர்வைப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல், நிருவகிக்கப்படுதல் மற்றும் அறவிடப்படுதல் வேண்டும்.

*சூழல் பேணல் அறவீடு திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதல்.*

**4**. மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உற்பத்தித்தீர்வைப் பணிப்பாளர் தலைமையதிபதியும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் திரட்டுநிதியத்தின் "சூழல்பேணல் அறவீட்டுக் கணக்கு"ற்கு அனுப்புதல் வேண்டும்.

*பாராளுமன்றத்துக்கு முன்னர் இடப்படவேண்டிய கட்டளை முதலியன.*

**5**. அமைச்சரால் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் –

(அ) அமைச்சர் அதற்கான தனது கையொப்பத்தை இடுவதன்மீது உடனடியாக செயற்பாட்டிற்கு வருதல் வேண்டும் ;

(ஆ) இயலக்கூடியளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் ;

(இ) அதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக பாராளுமன்ற தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாதவிடத்து அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து பயனுறுவதாக இலதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சூழல் பேணல் அறவீடு செலுத்துவதற்கு தவறுகை மீதான தண்டம்.

**6.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி சேகரிக்கப்பட்டதும் விதிக்கப்பட்டதுமான சூழல் பேணல் அறவீட்டை செலுத்துவதற்கு ஆளாகும் எவரேனும் ஆள் தம்பக் கத்தில் தவணை தவறுகையிலுள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வொரு தவறாளர் மீதும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட் டுள்ளவாறான அத்தகைய தொகையில் தண்டப்பணமொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுகின்ற ஆளொவ்வொரு வரும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் நியதிகளின்படி தவணை தவறுகையிலுள்ளவராக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் தவணை தவறுகையிலுள்ள தொகையை மீள அறவிடுவதற்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை, அத்தகைய தவணை தவறுகை தொடர்பிலான நிகழ்வுகளை ஆதாரப்படுத்துவதற்கு அந்த சந்தர்ப்பத்தில் பொருத்தமானதென கருதுகின்ற அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அத்துடன் மத்திய சூழல் அதிகாரசபை அதன்மேல் தண்டத்தையும் தவணை தவறுகையிலுள்ள தொகையும் மீள அறவிடுதல் மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திற்கு அல்லது

சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உற்பத்தித்தீர்வைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தண்டத்தையும் தவணை தவறுகையிலுள்ள தொகையையும் மீள அறவிடுவதை செயற்படுத்த அறிவுறுத்துதல் வேண்டும். மத்திய சூழல் அதிகாரசபையானது இந்நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல் களையும் காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை**

(பிரிவு 7)

| | நிரை I<br>அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள் | நிரை II<br>செலுத்தவுள்ள தண்டப்பணம் |
|---|---|---|
| 1. | குறித்துரைக்கப்பட்ட பொருளொன்றைச் சொந்தமாக வைத்திருக்கும் பாவனையாளர் | ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான |
| 2. | இறக்குமதியாளர் | ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான |
| 3. | உள்நாட்டு உற்பத்தியாளர் | ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான |
| 4. | சேவை வழங்குநர் (இலங்கையினுள்) | ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்